தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 4.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

நடமாடும் நூல்நிலையங்கள்

*742 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நடமாடும் நூலகங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடமாடும் நூலகங்கள் இயங்கி வருகின்றன.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நடமாடும் நூல் நிலையங்கள் பெரிதும் பெண்களுக்குப் பயன்படுகிற காரணத்தால், அதைத் தீவிரப்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவினர், அவரவர்களுடைய நிதி வசதிக்கேற்ப, இந்த நடமாடும் நூலகங்களை இயக்கி வருகிறார்கள். நிதி வசதி சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூரில்தான் ஓரளவு இருந்ததன் காரணமாக அவர்கள் அதைச் செய்து தந்திருக்கிறார்கள். வேறு எந்த மாவட்டத்தையும்விட கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் ஐந்து வாகனங்கள் பயன்பட்டு வருகின்றன.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, நடமாடும் நூலகங்கள் என்ற பெயரில் மோட்டார் வாகனங்களின் மூலம் பெரிய நகரங்களில் எல்லோருக்கும் நூல்கள் விநியோகம் செய்கிறார்கள். சிறிய நகரங்களிலும் பெரிய பஞ்சாயத்துக்களிலும் சைக்கிள் போன்ற வாகனங்களை வைத்து அங்கிருக்கின்ற மக்களுக்கும் நூல்களைத் தர ஏற்பாடு செய்யப்படுமா ?

[1974 ஏப்ரல் 4

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Various kinds of libraries are available in cities. A number of facilities are there. But in rural areas and in taluk headquarters there is only small libraries of the Local Library Authority. Mobile libraries are necessary only in these rural areas. So, will the Hon. Minister give his attention to this problem and see that mobile libraries are arranged in village areas?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்டத்திலிருக்கும் கிராமப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நடமாடும் நூல் நிலையங்கள் போகவேண்டும் என்ற கொள்கையும் கருத்தும் அரசுக்கு உண்டு. ஆனால், மாவட்ட நூலக ஆணைக் குழுவினர்தான் இதனைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் நிதி வசதியைப் பொறுத்து இந்த நடமாடும் நூலகங்களை அமைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட ஆணைக் குழுவினுடைய நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம், அதனுடைய நிர்வாகத்தை எப்படியெல்லாம் சீரமைக்கலாம் என்று ஆராய திரு. சுப்பராயன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்த பிறகு நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம் என்பதுபற்றியும் நடமாடும் நூலகங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் கிடைக்க எந்த வகையில் செய்யலாம் என்பதுபற்றியும் நாம் ஆராய வேண்டிவரும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில்தான் இந்த நடமாடும் நூலகங்களினுடைய தேவை அதிகமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் எந்தெந்த மாவட்டங்கள் தங்களுடைய சொந்த நிதியைக்கொண்டு இம்மாதிரி நடமாடும் நூலகங்களை ஏற்படுத்த முடியவில்லையோ அவர்களுக்கு ஓரளவு அரசு மானியமாகவும் கடனாகவும் தொகை கொடுத்து, இம்மாதிரி நடமாடும் நூலகங்களை ஏற்படுத்தும் அளவுக்கு வகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு அவர்கள் செஸ் மூலமாக வரும் தொகைக்குச் சமமான ஈட்டுத் தொகையை அரசாங்கம் கொடுத்து வருகிறது. அதிலிருந்துதான் அவர்கள் பல்வேறு கிளை நூலகங்களைப் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனுடைய நிர்வாகச் செலவுகளை

1974 ஏப்ரல் 4]

அவர்கள் சரிக்கட்டியாக வேண்டும். ஆகவே, எங்கே ஓரளவு நிதி மிச்சப்படு கிறதோ அந்த இடத்தில் நடமாடும் நூலகங்களை அமைப்பதற்கான வாகன வசதி எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. மாவட்ட ஆணைக் குழுவின் நிதி வசதிகளைப் பெருக்குவதில் கருத்து செலுத்த வேண்டியவர்களாக இருக் கிறோம். ஆகவேதான், குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, தற்போது நடமாடும் நூல கங்களில் எவ்வளவு புத்தகங்கள் வைக்கப்பட்டு கொண்டு போகப்படுகின்றன? அவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் என்ன? எந்த எந்த பொருள் குறித்த புத்தகங்கள் அதில் இருக்கின்றன? நூலகங்கள் சம்பந்தமான அறிக்கை வரும், வரும் என்று பல காலமாக இங்கே சொல்லப்படுகிறது. அந்த அறிக்கை எப்பொழுதுதான் வரும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னையில் 4,000 நூல்களைக் கொண்ட ஒரு இயங்கும் நூலகம் இயங்கி வருகிறது. திருநெல்வேலியில் 3,000 நூல்களைக் கொண்ட ஒரு இயங்கும் நூலகம் இயங்கி வருகிறது. கோயம்புத்தூரில் 500 நூல்களைக் கொண்ட மூன்று வாகனங்களும், 3,000 நூல்களைக் கொண்ட ஒரு வாகனமும், இரண்டா யிரம் நூல்களைக் கொண்ட ஒரு வாகனமும் இயங்கி வருகின்றன. திரு. சுப்ப ராயன் அவர்கள் தலைமையில் ஒரு குழு நான்கைந்து மாதங்களுக்கு முன்புதான் அமைக்கப்பட்டது. அவர்கள் சென்னை, மதுரை, இன்னும் வேறுபல இடங் களுக்கும் சென்று ஆங்காங்கே விசாரித்து பல்வேறு கருத்துக்களை அறிந்து வந்தார்கள். கிட்டத்தட்ட சனவரி, பிப்ரவரி மாதத்திற்குள் அறிக்கை தரும் படியாகக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், அவர்கள் மேலும் சில விவரங்களை பல இடங்களில் கேட்டு அறிய வேண்டும் என்றும், இன்னும் சென்னையில் நூலகங்களில் ஈடுபாடு உள்ளவர்கள், நூலகங்களில் அக்கறை கொண்டுள்ளவர்கள், நூலகங்களைக் கண்காணித்து வருகிறவர்கள் ஆகியோர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்றும், மே திங்களில் அறிக்கை தந்துவிடுவோம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். மே திங்களுக்குள்ளாக அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.